**அனுப்புநர்**

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர்
கல்வி (அலுவலர்), புதுச்சேரி

**ந.க.எண். 000297 / F1 / 2020** **நாள் : 11 .02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2020 – +1 Arrear தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

*********

மார்ச் 2019 மற்றும் ஜூன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளின் போது, செய்முறை புறத்தேர்வில் பங்கேற்காமல் உள்ள, பள்ளியில் தற்போது +2 பயிலும் மாணாக்கருக்கு ( +1 Arrear candidates) செய்முறைத் தேர்வு நடத்துதல் தொடர்பாக தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், பின்வரும் அறிவுரைகளை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் **12.02.2020 முதல் 24.02.2020 வரையிலான நாட்களில்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, +1 Arrear தேர்வர்களுக்கு மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வுக்கான வெற்று மதிப்பெண் பட்டியல்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. மார்ச் 2019 மற்றும் ஜூன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளின் போது, செய்முறை புறத்தேர்வில் பங்கேற்காத (Absent) கீழ்க்காணும் மூன்று (3) வகை தேர்வர்களுக்கு, **25.02.2020–க்குள் பள்ளி மாணாக்கருக்கான செய்முறைத் தேர்வு நடத்தப்படும் மையத்திலேயே செய்முறை புறத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.**

   I. தங்கள் பள்ளியில் +1 பயின்று, தற்போது +2 பயிலும் மாணவர்கள்.

   II. தங்கள் பள்ளியில் +1 பயின்ற பின், பள்ளி மாற்றுச் சான்றிதழ் (TC) பெற்று இடை நின்றவர்கள்.

   III. வேறொரு பள்ளியில் +1 பயின்று, தற்போது தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்கள்

2...

3. வேறொரு பள்ளியில் +1 பயின்ற மாணவர்களது, சம்பந்தப்பட்ட பாடங்களின் செய்முறை பதிவேடுகளை (+1 Record Book) பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொண்டு, செய்முறை புறத்தேர்வு நடத்தி மதிப்பெண்கள் வழங்கும் சமயம், செய்முறை பதிவேடுகளுக்கான மதிப்பெண்களையும், திறன் மதிப்பீட்டுக்கான மதிப்பெண்களையும் (3+2) வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

4. **இம்மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடத்தினை முன்கூட்டியே பள்ளித் தலைமையாசிரியர் தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை பள்ளி அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.**

5. ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்ற (present) மாணவர்களுக்கு மீண்டும் செய்முறைத் தேர்வு நடத்த வேண்டியதில்லை.

6. **இத்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வில் வழங்கப்பட்ட மதிப்பெண்களை பதிவு செய்த மதிப்பெண் பட்டியல்களை தனி கட்டுக்களாக கட்டி அவற்றை அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 03.03.2020 அன்று ஒப்படைக்கவேண்டும்.**

ஒம்/—
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.